# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- TOPICWISE QUESTION
- WEEKLY CURRENT AFFAIRS
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- MONTHLY QUESTION AND ANSWER

**07.11.2022**

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 07-11-22
   - இந்திய ஆன்மீகவாதி **கிருபானந்த வாரியார்** (1993), சுதந்திர போராட்ட வீரர் சி. சுப்பிரமணியம் (2000) ஆகியோரின் **நினைவு தினம்**.
   - இந்தியாவில் முதல் நோபல் பரிசு பெற்ற அறிவியல் மேதை பாரத ரத்னா **சர். சந்திரசேகர வெங்கட ராமன்** (1888), ரேடியம், பொலோனியம் தோரியம் போன்ற கதிர்வீச்சு தனிமங்களை கண்டுபிடித்தவரும், நோபல் பரிசு பெற்ற முதல் பெண்ணுமான **மேரி கியூரி** (1867) ஆகியோரின் **பிறந்த தினம்.**

## மாநில செய்திகள்

1. அதிகரிக்கும் காசநோய் பரவல்:
   - தமிழகத்தில் நிகழாண்டு **77 ஆயிரம் பேர்** காச நோயால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் **13 சதவீதம் அதிகம்** என்பது குறிப்பிடத்தக்கது.
   - காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, **2025-க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும்** என்ற இலக்குடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
   - **உத்தரப்பிரதேசத்தில்** மட்டும் 4.27 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
   - தமிழகத்தில் 77,019 பேருக்கு அந்நோயின் பாதிப்பு இருந்தது. அவர்களில், தனியார் மருத்துவமனைகளில் 17,771 பேரும், அரசு மருத்துவமனைகளில் 60,048 பேரும் முதல்கட்ட சிகிச்சை பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
   - கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை 13 சதவீதம் குறைவாக இருந்தது. அதாவது, அந்த காலகட்டத்தில் தமிழகத்தில் 69,171 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

## பயிற்சி

1. ஜப்பானில் சர்வதேச கடற்படை பயிற்சி
   - ஜப்பானில் சர்வதேச கடற்படை பயிற்சி தொடங்கியது. இதில் இந்தியா உள்பட 12 நாடுகளை சேர்ந்த போர்க்கப்பல்கள் பங்கேற்று உள்ளன.
   - அமெரிக்கா, கனடா இரண்டாம் உலக போரில் ஜப்பானின் தோல்வியை தொடர்ந்து உருவாக்கப்பட்ட கடற்படையின் **70-வது ஆண்டு நினைவு தினம்** தற்போது அனுசரிக்கப்பட்டு வருகிறது.

- இதையொட்டி சர்வதேச கடற்படை பயிற்சிக்கு ஜப்பான் ஏற்பாடு செய்தது. தலைநகர் டோக்கியோவுக்கு தெற்கே யோகோசுகாவில் உள்ள **சுகாமி வளைகுடா** பகுதியில் இந்த பயிற்சி நேற்று தொடங்கியது.
- இன்றும் நடைபெறும் இந்த நிகழ்வில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட 12 நாடுகளை சேர்ந்த 18 போர்க்கப்பல்கள் பங்கேற்று உள்ளன. மேலும் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகள் போர் விமானங்களையும் அனுப்பி உள்ளன.
- கடந்த 20 ஆண்டுகளில் முதல் முறையாக ஜப்பான் நடத்தும் இந்த சர்வதேச கடற்பயிற்சியில் **தென்கொரியா** முதல் முறையாக கலந்து கொண்டுள்ளது.

## தரவரிசை

### 1. இந்தியாவுக்கு அதிக கச்சா எண்ணெய் ஏற்றுமதி: ரஷியா முதலிடம்

- கடந்த அக்டோபர் மாதத்தில் இந்தியாவுக்கு அதிக கச்சாஎண்ணெய் ஏற்றுமதிசெய்த நாடுகள் பட்டியலில் **ரஷியா முதலிடம்** பிடித்துள்ளது. பல ஆண்டு காலமாக இந்தப் பட்டியலில் முன்னணியில் இருந்த சவூதி அரேபியா, இராக் ஆகிய நாடுகள் பின்தங்கியுள்ளன.
- கடந்த 2022 மார்ச் மாத நிலவரப்படி இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் ரஷியாவின் பங்கு 0.2 சதவீதம் மட்டுமே இருந்து வந்தது.
- இதுவே அக்டோபரில் ஒரு நாளைக்கு 9,35,556 பேரல் இறக்குமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துவிட்டது.
- அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் **22 சதவீதம்** ரஷியாவில் இருந்து வந்துள்ளது.
- இதற்கு அடுத்து **இராக்கில் இருந்து 20.5 சதவீதம், சவூதி அரேபியாவில் இருந்து 16 சதவீதம்** இறக்குமதியாகியுள்ளது.

## பொருளாதாரம்

### 1. சர்க்கரை ஏற்றுமதி வரம்பு 60 லட்சம் மெட்ரிக் டன்

- சர்க்கரை விலை ஸ்திரத்தன்மை, ஆலைகளின் நிதி நிலை சமநிலைப்படுத்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கு 60 லட்சம் மெட்ரிக் டன் வரை ஏற்றுமதி ஒதுக்கீட்டை மத்திய வர்த்தகம், உணவு, நுகர்வோர் துறை நிர்ணயித்துள்ளது.
- சர்க்கரையின் விலை ஸ்திரத்தன்மையையும், சர்க்கரை ஆலைகளின் நிதிநிலையையும் சமநிலைப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

- ❖ அதன்படி, அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதி அடிப்படையிலான எதிர்பார்ப்பு உற்பத்தி நிலவரப்படி பயன்பாடு அளவு பிரிக்கப்பட்டுள்ளது.
  - ✓ சுமார் 2.75 கோடி மெட்ரிக் டன் சர்க்கரை உள்நாட்டு உபயோகத்திற்காகவும், 50 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை எத்தனால் உற்பத்திக்கும் திருப்பிவிட மத்திய அரசு முன்னுரிமை அளிக்கும்.
- ❖ 2021-2022 சர்க்கரை பருவத்தில் இந்தியா 1.10 கோடி மெட்ரிக் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்து, **சர்வதேச அளவில் 2-ஆவது இடத்தை பெற்றிருந்தது**.
- ❖ 2021-22 கரும்பு பருவத்தில் 1.18 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான கரும்பு கொள்முதல் செய்யப்பட்டிருந்தது.
- ❖ கடந்த அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் விவசாயிகளின் கரும்பு நிலுவைத் தொகையில் 96 சதவீதத்திற்கும் மேல் வழங்கப்பட்டுள்ளன.